அவர்கள் தூத்துக்குடி துறைமுகத்தைப் பற்றிப் பேசி இருப்பதால், அதைப் பற்றி முழு அளவிலே மக்களுக்குச் செய்தி கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தூத்துக்குடி துறைமுகத் திட்டம் என்பது பல ஆண்டுகளுக்கு முன்னலே நிபுணர்களால் ஆராயப்பட்டு, அதற்கென்று அமைக்கப்பட்ட குழுக்களெல்லாம் பரிசீலனைகளை நடத்தி, மிகவும் தேவையானது என்றும், ஆதாயம் தரத்தக்கது என்றும், வளர்ச்சி அடையத் தக்கது என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டு, துவக்கி வைக்கப்பட்டதாகும். இதற்கான துவக்க விழாவை நடத்திக் கொடுத்த, மறைந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தம்முடைய சொற்பொழிவில் துவக்கத்தில் சொன்னர்கள். தூத்துக்குடி துறைமுகம் தேவையா என்பதற்கு வாதங்களே தேவையில்லை என்று அன்றே குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு திட்டத்திற்கு கிட்டத்தட்ட ரூ. 6 கோடி செலவழித்த பிறகு ஐயப்பாடுகள் கிளப்பப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், போன வாரத்தில் இங்கே வந்துபோன இந்தியப் பேரரசின் அமைச்சர் அவர்கள் கூட ஆங்கிலத்தில் சொன்னர்கள். 'It will not be abandoned' என்று சொன்னர்கள் 'It will not be abandoned' அது கைவிடப்பட முடியாது—என்று சொல்வது, மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் மனைவிக்கு கடனுக்கு கணவன் சொல்கிற சமாதானத்தைப்போல் தொனிக்கிறதே தவிர, நேரிடையாக சொன்னல், 'It will be carried out. It will be executed' என்று இருக்கவேண்டும். 'It will not be abandoned' என்று சொன்னதுதான் அவர் சென்னையிலே எடுத்துச்சொன்னது. அதற்கு மறுதினம் நான் ஏற்கனவே பிரதம மந்திரி அவர்களுக்கு எழுதியிருந்த கடிதத்திற்கு, தூத்துக்குடி துறைமுகத்தைப் பற்றிய கடிதத்திற்கு, எனக்கு ஒரு பதிலை பிரதம மந்திரி அவர்கள் மெத்த கருணையோடு அனுப்பியிருக்கிறர்கள். அதிலே அவர்கள் என்ன சொல்கிறர்கள் என்றால், 'தூத்துக்குடி துறைமுகம் சம்பந்தமாக நீங்கள் எழுதியிருக்கிற எல்லா விஷயங்களையும் காபினெட்டில் பரிசீலிக்கிறேன்' என்றுதான் அவர்கள் எழுதியிருக்கிறர்கள். ஆனல் நம்முடைய எதிர்க்கட்சி நண்பர்கள் எப்படியும் தூத்துக்குடி துறைமுகம் வரத்தான் போகிறது, இதற்கு ஒரு 'எழுச்சி நாள்' என்று சொல்வானேன் என்று கேட்கிறர்கள். அப்படி திடமாக நம்பிக்கொண்டிருக்கத்தக்க நிலை இல்லை என்பதை மட்டும், அவர்கள் இந்த நாட்டிற்கு உரியவர்கள் என்ற முறையில் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே வந்திருந்த அமைச்சர், இது கட்டாயம் கிடைக்கும் என்று உறுதி அளிக்கவில்லை. பொறுப்பேற்றிருக்கிற பிரதம மந்திரி அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில் இதைப்பற்றி மந்திரி சபையில் பரிசீலிக்கப்படும் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறர்கள். ஆகையினல் நான் மறுபடியும் இந்த 'எழுச்சி நாள்' மிகத் தேவை என்பதை வலியுறுத்தி, அதில் கலந்து கொள்ளுமாறு காங்கிரஸ் நண்பர்களை அழைக்கிறேன்.

1967 ஜூலை 10]

கோரிக்கை எண் XXVI -க்கு முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்களெல்லாம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் XXVI — பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,58,47,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் XLI— க்கு முன்மொழியப்பட்ட திரு. நா. காசிராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோற்கடிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :—

"கோரிக்கை எண் XLI — பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,84,57,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் XXVI— க்கு முன்மொழியப்பட்ட திரு. நா. காசிராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோற்கடிக்கப்பட்டது.

முன்மொழியப்பட்ட மற்றொரு வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் XXVII — பொதுப் பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,45,16,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் XXVIII —க்கு முன்மொழியப்பட்ட திரு. இல. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோற்கடிக்கப்பட்டது.

முன்மொழியப்பட்ட மற்றொரு வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :—

"கோரிக்கை எண் XXVIII — பொதுப்பணிகள்—பணியாளரும் கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,86,37,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் XLII —க்கு முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :—

"கோரிக்கை எண் XLII —பொதுப் பணிகள்—மூலதனச் செலவுகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,35,67,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளை காலை, மாலை இரு நேரங்களிலும் பேரவைக் கூட்டம் உண்டு என்பதை நினைவுபடுத்தி, இன்றைய நிகழ்ச்சிகளை இத்துடன் முடிக்கிறேன். மீண்டும் நாளை காலை 9 மணி அளவிலே பேரவை கூடும். வணக்கம்.

இரவு 7–08 பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

7. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

230. *Notification issued with G.O. Ms. No. 632, Home, dated the 28th February 1967, in regard to "The Madras Hindu Marriage (Registration) Rules, 1967". [Laid on the Table of the House under sub-section 3 of Section 8 of the Hindu Marriage Act, 1955 (Central Act 25 of 1955).]*

B. Reports, Notifications and Other Papers.

* 80. *A Review of the working of Minor Ports in Madras State, 1966–67 (English).*

* 81. *A Review of the Road Development and Building Programme in Madras State, 1966–67 (English).*

* 82. *Note on the Khadi and Village Industries Board, 1967–68 (Tamil).*

* 83. *A Review on the Progress made in the Handloom Industries (Tamil).*

84. *Report of the Committee on Rules, 1967.*

---

* Despatched on 7th July 1967.

இணைப்பு I.

[471-ம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 222-க்கான விடையைக் காண்க.]

(அ) மாணவர்கள் இந்தியில் பெறும் மதிப்பு எண்கள், மொத்தத்தில் தேர்வு முடிவை நிர்ணயிக்கப் பயன்படுமே தவிர, இந்தியில் தேர்வை நிர்ணயிக்கப் பயன்படா.

(இ) இந்தியில் 60 சதவிகிதத்திற்கு மேல் மதிப்பு எண்கள் பெற்றதால் கல்லூரியில் மாதத்திற்கு ரூ. 50-ஆக உதவிபெறும் மாணவர்களின் எண்ணிக்கை மாவட்டவாரியாக—

(i)	இதர மாநிலத்தில் பயிலும் தமிழக மாணவர்கள்	8
(ii)	சென்னை	23
(iii)	செங்கற்பட்டு	5
(iv)	தென் ஆற்காடு	2
(v)	தஞ்சாவூர்	5
(vi)	திருச்சிராப்பள்ளி	35
(vii)	மதுரை	7
(viii)	திருநெல்வேலி	7
(ix)	கன்னியாகுமரி	5
(x)	நீலகிரி	2
(xi)	கோயம்புத்தூர்	4
(xii)	சேலம்	2
	மொத்தம் ..	105

(*a*) The marks that the students obtain in Hindi will be helpful for moderation and not for eligibility.

(*b*) *Districtwise details of students in Colleges who get Scholarship of Rs.* 50 *per mensem on account of their securing in Hindi over* 60 *per cent marks*,—

(i)	Madras students studying in other States	8
(ii)	Madras	23
(iii)	Chingleput	5
(iv)	South Arcot	2
(v)	Thanjavur	5
(vi)	Tiruchirappalli	35
(vii)	Madurai	7
(viii)	Tirunelveli	7
(ix)	Kanyakumari	5
(x)	The Nilgiris	2
(xi)	Coimbatore	4
(xii)	Salem	2
	Total ..	105

இணைப்பு

[486-ம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினு எண் 229-க்கான விடையைக் காண்க.]

சென்னை, மதுரைப் பாற்பண்ணைத் திட்டங்களைத் தவிர, தற்போது சுமார் 2,500 பால் வழங்கு சங்கங்கள் பால் வாணிகத்தில் ஈடுபட்டுள்ளன. இச்சங்கங்கள்/யூனியன்கள் பொது மக்களுக்கு வழங்குவதற்காக பாலைச் சேகரிக்கின்றன. பாஸ்டர் முறையில் பாலைப் பக்குவப்படுத்தல், முன்னதாகக் குளிர வைத்தல் போன்ற வசதிகள் இல்லாமல் மிகுதியான அளவில் பாலைக் கையாண்டால், பால் கெட்டுப்போவதுடன், அதன் விளைவாக பால சங்கங்கள் தங்களது பால் உற்பத்தியைப் பெருக்க இயலாமற் போய்விடும். மிகுதியான பாலை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன், பாலைக் குளிர வைக்கும் இயந்திரங்கள் குளிர் பதனம் செய்யும் இயந்திரங்கள், பாலைப் பக்குவம் செய்யும் இயந்திரங்கள் ஆகியவை கீழே கண்ட இடங்களில் அரசால் அல்லது அரசிடமிருந்து கடனையும் உதவித் தொகையும் பெற்று சங்கங்களால்/யூனியன்களால் நிறுவப்பட்டுள்ளன.

பாலைக் குளிர வைக்கும் இயந்திரங்கள் நிறுவப் பட்டுள்ள இடங்கள்.	பாலைக் குளிர்ப்பதனம் செய்யும் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ள இடங்கள்.	பாலைப் பக்குவப்படுத்தும் இயந்திரங்கள் நிறுவப் பட்டுள்ள இடங்கள்.
(1)	(2)	(3)
வேலூர் (துறையினர்).	பானு செட்டி சத்திரம், (துறையினர்)	சென்னை பால் பண்ணைத் திட்டம், சென்னை (கூட்டுறவுச் சங்கம்)
நாகப்பட்டணம் (துறையினர்).	வாலாஜாபாத் (துறையினர்).	கோயம்புத்தூர் (யூனியன்).
தாராமங்கலம் (கூட்டுறவுச் சங்கம்).	திருப்பூர் (கூட்டுறவுச் சங்கம்).	கோடைக்கானல் (யூனியன்).
செலம் (கூட்டுறவுச் சங்கம்).	பெரம்பலூர் (திருச்சிராப்பள்ளி) (யூனியன்).	நாகர்கோயில் (யூனியன்).
திண்டிவனம் (கூட்டுறவுச் சங்கம்), மன்னார் குடி (கூட்டுறவுச் சங்கம்).	சுல்தான்பேட்டை (கோயம்பத்தூர் யூனியன்).	திருச்சிராப்பள்ளி (யூனியன்). மதுரை பால் பண்ணைத் திட்டம்.
மாயூரம் (கூட்டுறவுச் சங்கம்).	உதகமண்டலம் (கூட்டுறவுச் சங்கம்) விருதுநகர் (துறையினர்). ஸ்ரீவில்லிபுத்தூர் (துறையினர்).	தஞ்சாவூர் (யூனியன்).
	திண்டுக்கல் (துறையினர்)	சிதம்பரம் (யூனியன்).
	மன்னார்குடி (தஞ்சாவூர்) (யூனியன்).	ஈரோடு (துறையினர்).

1967 ஜுலை 10]

இந்த இயந்திரங்களும் கருவிகளும் நிறுவப்பட்டதன் விளைவாக, அப்பகுதிகளில் உள்ள சங்கங்கள் தங்களது பால் உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியினை மேற்கொண்டன. புதிய கறவை மாடுகளை வாங்குதல் (அதற்காக அரசு கடன் வழங்குகின்றது) விஞ்ஞான முறையில் இனப் பெருக்கம் செய்து அவற்றின் தரத்தை உயர்த்துதல், சத்துக்கள் நிறைந்த தீவனத்தை தமது பிராணிகளுக்குக் கொடுத்தல் ஆகிய பணிகள் மூலம் சங்கங்கள் பால் உற்பத்தியைப் பெருக்க முயலுகின்றன. இந்த வேலைகளுக்கென அரசினர் நான்காவது திட்டக் காலத்தில் உதவி அளிக்கின்றனர். அவற்றில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கறவை மாடுகளை வாங்கக் கடன்கள்.—கறவை மாடுகளை வாங்க முக்கியமாக கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள் வழங்குவதற்கென நான்காவது திட்டக் கால அளவில் ரூ. 200.00 லட்சம் ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பால் உற்பத்தியைப் பெருக்குவதென்னும் இறுதி நோக்கத்துடன், கறவை மாடுகளின் எண்ணிக்கையைக் கூடுதலாக்க, பால் வழங்குச் சங்கங்களுக்கு இதனால் வசதி ஏற்படும்.

கால்நடைகளின் தீவனம்.—சத்துள்ள தீவனத்தை கொடுத்தால், கால்நடைகள் அதிகமாகப் பால் கறக்கும்; அதனால் பால் உற்பத்தி பெருகும். விஞ்ஞான முறையில் தயாரித்த சத்துக்கள் நிறைந்த தீவனங்கள் அதிக அளவில் கிடைக்கச் செய்வதற்காக, கீழ்க்கண்ட இடங்களில் அரசின் உதவியுடன் அண்மை ஆண்டுகளில் கால்நடைத் தீவனத் தயாரிப்புத் தொழில் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன :—

1. விருதுநகர் சங்கம்.
2. ஸ்ரீவில்லிபுத்தூர் சங்கம்.
3. தஞ்சாவூர் யூனியன்.
4. காரைக்குடி சங்கம்.
5. சென்னைத் திட்டம்.
6. சிதம்பரம் யூனியன்.
7. திருச்சிராப்பள்ளி யூனியன்.
8. திருப்பூர் சங்கம்.
9. ஈரோடு சங்கம்.
10. கோயம்புத்தூர் யூனியன்.

மேற்சொன்ன தொழில் பிரிவுகள் நாளொன்றுக்கு 3 முதல் 4 டன் தீவனம் மட்டுமே தயாரிக்கும் திறன் கொண்டவை என்பதால், பெரிய அளவுத் தொழில் பிரிவு ஒன்றை நிறுவுவது அவசியமெனக் கருதப்படுகிறது.

அரசினர் உதவியுடன் தீவனப் பண்ணைகளை அரசினர் நிறுவும் வேலையும் மேற்கொள்ளப்படுகிறது. பால் மரத்த பசுக்கள் மீட்புப் பண்ணைகளில் உள்ள பசுக்களை பால் கொடுக்கிற நிலைக்கும் கொணர்

வதற்கென நல்ல தீவனம் தேவைப்படுகிறது. அதற்கு வேண்டிய தீவனத்தை வழங்க தீவனப் பண்ணைகள் பேருதவியாக இருக்கும்.

கால்நடைகள் மேம்பாடு.—இம்மாநிலத்தில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, கால்நடை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கால் நடை மேம்பாட்டு மும்முரத் திட்டத்தின் மூலம் அப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கால் நடைகளின் தரத்தை உயர்த்தல், அவற்றில் பால் உற்பத்தித் திறனை அதிகரித்தல் ஆகிய பணிகள் முக்கியமானவை. விஞ்ஞான முறைப்படி கால்நடை இனப்பெருக்க வேலைகள், கறவை மாடுகளை வாங்க கடன்களை வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அவற்றுடன், தீவனப்பயிர் பயிரிடக் கிணறு தோண்டுதல், விசையேற்றங்கள் ஏற்படுத்தல் போன்ற பால் பண்ணை விரிவாக்கப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில் சென்னைப் பால் பண்ணை பால் வழங்குத் திட்டம், கன்றுகள் வளர்ப்புக்காக ரூ. 5.00 லட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் வாயிலாக, இரண்டாண்டுகளில் சென்னைப் பால்பண்ணை பால் வழங்குத் திட்டத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைக் கூடுதலாக்கமுடியும்.

அத்துடன், மாதவரத்தில் அரசினர் பால்பண்ணை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து மிகுதியான பால் அளிக்கும் மாடுகள் அந்தப் பால் பண்ணைக்காக வாங்கப்படுகின்றன. பால்பண்ணையில் தற்போது சுமார் 800 மாடுகள் (கன்றுகள் உட்பட) உள்ளன. நான்காவது திட்டக் காலத்தில் பால்பண்ணையை விரிவுபடுத்துவதற்காக ரூ. 50,00 லட்சம் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒவ்வொருவரும் பயன்படுத்தும் பாலின் அளவு நாள் ஒன்றுக்கு 2 அவுன்ஸ் என்ற குறைந்த அளவாக உள்ளது. அதை அதிக ரிக்கும் பொருட்டு ஏதேனும் மாற்றுப் பாலைக் கண்டுபிடிப்பது அவசியமாகும். உலக உணவுத் திட்டம் மூன்றுண்டுக் கால அளவில் 389 டன் பால் பவுடரை வழங்குகின்றது. அதைச் சென்னையிலும் மதுரையிலும் உள்ள மக்களுக்கு ஆடை நீக்கிய பாலாகவும் இருமுறை ஆடை நீக்கிய பாலாகவும் வழங்க இயலும். மதுரையில் உள்ள யூனிசெஃப் பால்பண்ணையிலும் (அது அண்மை யில்தான் தயாரிப்பைத் தொடங்கியது), மாதவரம் மத்தியப் பால் பண்ணையிலும் பாலைத் தயாரித்து புட்டிகளில் வழங்குவதற்கான வசதிகள் உள்ளன.

நான்காவது திட்டக்காலத்தில், சேலம், திருநெல்வேலி, வேலூர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் ரூ. 15.00 லட்சம் செலவில் பாலைப் பக்குவப்படுத்துவதற்கான மூன்று தொழிற்சாலைகள் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. பாலைப் பதப்படுத்துவதற்காக, சிதம்பரத்திலும் தஞ்சாவூரிலும் தொழிற்சாலைகளும், பாலைக் குளிர வைப்பதற்காக திருப்பூரிலுள்ள தொழிற்சாலையும் விரைவில் செயல் படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

There are at present about 2,500 Milk Supply Co-operatives engaged in the milk trade apart from the Madras and Madurai Dairy Projects. These Societies/Unions are collecting milk for distribution to the public. Since the handling of milk in large quantities without facilities like Pasteurisation, Pre-cooling, etc., will result in the spoilage of milk, the societies could not aim at increasing their milk production. To achieve the object of increased production of milk, coolers, chilling plants and pasteurisation plants have been established at the following places by the Government themselves or with their assistance by way of loan and subsidy to the Societies/Unions.

Coolers.	Location of Chilling Plants.	Pasteurisation Plants.
(1)	(2)	(3)
Vellore (Department).	Baluchettichatram (Department).	Madras (Project) Madras (Co-operative).
Nagapattinam (Department).	Wallajabad (Department).	Coimbatore (Union).
Tharamangalam (Co-operative).	Tiruppur (Co-operative Society).	Kodaikanal (Union).
Salem (Co-operative)	Perambalur (Trichy) (Union).	Nagercoil (Union).
Tindivanam (Co-operative).		
Mannargudi (Co-operative)	Sulthanpet (Coimbatore) (Union)	Tiruchirappalli (Union) Madurai (Project).
Mayuram (Co-operative)	Ooty Co-operative Society. Virudhunagar (Department).	Thanjavur (Union).
	Srivilliputhur Department).	Chidambaram (Union).
	Dindigul (Department). Mannargudi (Thanjavur) (Union).	Erode (Department),

With the establishment of these equipments and plants the societies lying in those areas are making efforts to increase their milk production by purchase of new milch animals for which the Government are issuing loans, upgrading their animals by scientific breeding and by feeding their animals with highly nutritive concentrate mixtures. For all these activities Government are extending assistance during the Fourth Plan Period some of which are as follows :—

Loan for purchases of milch cattles.—A sum of Rs. 200.00 lakhs is proposed during he Fourth Plan Period for the issue of loans mainly to co-operatives for the purchase of milch animals. This would enable the milk supply societies, etc., to increase their herd strength with the ultimate view of increasing milk production.

Feeding of animals.—The production of milk depends to a great extent on the feeding of cattle with nutritive concentrates. With a view to make available such concentrates manufactured on scientific lines, cattle feed manufacturing units have been established at the following centres with the assistance of Government during the recent years :—

1. Virudhunagar Society.
2. Srivilliputhur Society.
3. Thanjavur Union.
4. Karaikudi Society.
5. Madras Project.
6. Chidambaram Union.
7. Tiruchirappalli Union.
8. Tiruppur Society.
9. Erode Society.
10. Coimbatore Union.

Since the above plants are capable of manufacturing only 3 to 4 tons of feed a day, setting up of a large sized unit is considered necessary.

Setting up of Fodder Farms with the assistance of Government is also undertaken to meet the demand for good fodder apart from the Salvage Farms for salvaging dry animals.

Cattle development.—For increasing the milk production in the State Cattle Development should also be undertaken which is being done through the Intensive Cattle Development Project, the main functions of which are improving the quality of cattle and raising their productivity of milk. Scientific breeding of animals, grant of loans for purchase of milch animals dairy extension activities like digging of wells and provision of pump sets for growing fodder are also being undertaken.

As far as this department is concerned (Madras Dairy and Milk Project), a sum of Rs. 5 lakhs is proposed to be utilised for rearing of young calves which will enable the project to increase its cattle strength in a couple of years.

In addition, a Government Dairy Farm has been set up at Madhavaram for which High Yielding animals are being purchased from various parts of the country. The present strength of the dairy farm is about 800 including young stock. A sum of Rs. 50 lakhs is proposed to be utilised for expanding the dairy farm during the Fourth Plan period.

To increase the per capita consumption of milk which is as low as 2 oz. per day, it would be necessary to find out some substitute milk. The World Food Programme is offering milk powder of 380 tonnes during a period of three years which could be made available to the citizens of Madras and Madurai areas as toned and double toned milk. Facilities for the preparation and distribution in bottles are available at the UNICEF dairy at Madurai which has just been commissioned and at the Madhavaram Central Dairy.

1967 ஜூலை 10]

During the Fourth Plan period three Pasteurisation Plants are proposed to be established at Salem, Tirunelveli and Vellore at a cost of Rs. 15 lakhs each. The pasteurisation plants at Chidambaram and Thanjavur and the chilling plant at Tiruppur are expected to be commissioned shortly.

இணைப்பு III.

[486-ம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 230-க்கான விடையைக் காண்க.]

21—5—1967-ல் மாதவரம் பால் பண்ணையில் உரிமம் பெற்றவர்கள் பேணிவரும் மாடுகளின் விவரம் :—

	வெள்ளை மாடுகள். (பசுக்கள்)	கறுப்பு மாடுகள். (எருமை)	மொத்தம்.
	(1)	(2)	(3)
கறவை மாடுகள்	373	401	774
பால் மரத்த மாடுகள்	49	29	78
கன்றுகள்	233	135	368
மொத்தம் ..	655	565	1,220

வெள்ளை மாடுகளின் (பசுக்கள்) இனவாரியான விவரங்கள் :—

தொடர் எண்ணும், இனமும்.	பால் தருபவை.	மலடு.	கன்றுகள்.
(1)	(2)	(3)	(4)
1 நாட்டுப் பசு ..	56	8	19
2 காங்கேயம்	1	..	..
3 ஒங்கோல்	23	14	..
4 அயர்ஷயர் கலப்பு ..	142	10	..
5 ஜெர்ஸி கலப்பு ..	61	4	194
6 ப்ரேஷியன் கலப்பு ..	75	10	6
7 தரமான சிந்தி ..	11	2	14
8 கிர்	2	1	..
9 தார்பார்கர் கலப்பு ..	1	..	..
10 குரென்ஸி கலப்பு ..	1	..	..
மொத்தம் ..	373	49	233

கறுப்பு மாடுகளின். (எருமை) இனவாரியான விவரங்கள் :—

தொடர் எண்ணும், இனமும்.	கறவை.	மரத்த மாடுகள்.	கன்றுகள்.
(1)	(2)	(3)	(4)
1 நாட்டு எருமை ..	146	10	9
2 முர்ரா உயர்தரம் ..	253	19	126
3 நீலி	1	..	..
4 ஜாபர்பாடி	1	..	..
மொத்தம் ..	401	29	135